1971 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

" தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 1/1971) ஆய்வு செய்வதற்காக முப்பது உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக் கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க் கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்றத் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்."

1. திரு. து. ப. அழகமுத்து
2. திரு. எஸ். ஆறுமுகம்
3. திரு. வி. கே. ராஜா பிள்ளை
4. திரு. எஸ். கணேசன்
5. திரு. ஜே. ஜேம்ஸ்
6. டாக்டர் எச். வி. ஹாண்டே
7. திரு. சு. துரைசாமி
8. திரு. பழனிவேல் ராஜன்
9. திரு. எஸ். சகாதேவன்
10. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
11. திரு. இராம அரங்கண்ணல்
12. திரு. எம். ஏ. லத்தீப்
13. திரு. மா. பா. சாரதி
14. திரு. எம். ஆர். கண்ணன்
15. திரு. ஆர். இராமலிங்கம்
16. திரு. கே. எஸ். கோதண்டராமையா
17. திரு. ஆ. கு. சுப்பையா
18. திரு. எம். சுரேந்திரன்
19. திரு. கே. எம். சுப்பிரமணியம்
20. திருமதி டி. என். அனந்தநாயகி

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை விதிகள் 139(1)-வது விதியின் கீழ் நான் மக்கள் பொதுநலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. க. அன்பழகன் அவர்களை இந்தக் கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நியமித்துள்ளேன்.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ் நாடு 1971-ம் உண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 2/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தம்முடைய இசைவைத் தெரிவித்துள்ளார்.